அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 19/2017(I)

எனது இல. IAD/3/MAINT/GA02/021-12

அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.11.01

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்கள்
அரசாங்க கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்டசபை தலைவர்கள்

**"நாமே ஆரம்பிப்போம் – டெங்குநோயை இல்லாதொழிப்போம், தேசிய புரட்சியில் ஒன்றிணைவோம்" 2017.11.09 மற்றும் 2017.11.10 இருநாள் நடைபெறும் இணைந்த நிகழ்ச்சித்திட்டம்**

மேற்படி விடயம் சம்பந்தமாக 2017.10.31 ஆந் திகதி சனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் சம்பந்தமாக.

02. எனது 2017.07.19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 19/2017 ஊடாக அறிவுறுத்தப்பட்டவாறு கடந்த காலப்பகுதியில் நாட்டில் நிலவிய டெங்குநோயை இல்லாதொழிப்பதற்காக அரசாங்க, மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அரைப்பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட பங்களிப்பினையும் ஒத்துழைப்பினையும் முதலில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

03. நாட்டில் தற்போது நிலவுகின்ற காலநிலையில் டெங்குத் தொற்று மீண்டும் தலைதூக்குவதாக பல பிரதேசங்களிலிருந்தும் அறியக் கிடைத்துள்ளது. இந் நிலை தொடர்ந்தும் பரவாமல் இருப்பதற்காக சனாதிபதி செயலகத்தின் அறிவுரைக்கமைய சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மூலம் உரிய அனைத்து நிறுவனங்களினதும் ஒருங்கிணைப்புடன் 2017.11.09 மற்றும் 10 ஆகிய இரு திகதிகளிலும் இணைந்த டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நாடு பூராவும் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

04. அதற்கமைய அனைத்து அரசாங்க நிறுவன வளாகத்திலும் (வைத்தியசாலை, பாடசாலை உட்பட) டெங்கு நுளம்புகள் பெருகுவதை கட்டுப்படுத்துவது தொடர்பாக, நுளம்புக் குடம்பிகள் பெருகுகின்ற இடங்களை இனங்கண்டு அனைத்து அரச அலுவலர்களும் முனைப்புடன் பங்களிப்பு நல்கி, அவற்றை சுத்தமுகமாக, 2017.11.09 மற்றும் 10 ஆந் திகதிகளில் குறித்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இத் தேசிய பணியில் இணைந்து ஒத்துழைக்கும்படி மீண்டும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

05. இச் சுற்றறிக்கை உள்நாட்டலுவல்கள் அமைச்சினதும் மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சினதும் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது என்பதை மேலும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

பிரதிகள்

1. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம் – தயவுடன் 2017/10/31 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைய தயவுடன் அறிந்து கொள்ளும் பொருட்டு
2. பிரதமரின் செயலாளர், பிரதமரின் அலுவலகம் - தயவுடன் அறிந்து கொள்ளும் பொருட்டு